# 19-12-2024 செய்தி

## ஆ.இரா. வேங்கடாசலபதிக்கு சாகித்திய அகாதெமி விருது

- பேராசிரியர் ஆ. இரா. வேங்கடாசலபதி எழுதிய திருநெல்வேலி எழுச்சியும் வ.உ.சி.யும் 1908 என்ற ஆய்வு நூலுக்கு சாகித்திய அகாதெமி விருது அறிவிக்கப்பட்டுள்ளது.
- தில்லியில் சாகித்திய அகாதெமியின் தலைவர் மாதவ் கௌஷிக் தலைமையில் நடைபெற்ற அகாதெமியின் கூட்ட முடிவில் 8 கவிதை நூல்கள், 3 நாவல்கள், 2 சிறுகதை நூல்கள், 3 கட்டுரை நூல்கள், 3 இலக்கிய விமர்சனங்கள், ஒரு நாடகம், ஓர் ஆய்வு நூல் என 21 மொழிகளின் படைப்புகள் 2024-ஆம் ஆண்டுக்கான சாகித்திய விருதுக்கு தேர்வாயின.
- இது குறித்த அறிவிப்பை அகாதெமியின் செயலர் டாக்டர். கே. ஸ்ரீனிவாசராவ் வெளியிட்டார்.
- இதில் வரலாற்றுப் பேராசிரியர் ஆ.இரா. வேங்கடாசலபதி எழுதிய திருநெல்வேலி எழுச்சியும், வ.உ.சி.யும் 1908 என்ற தமிழ் நூலுக்கு விருது அறிவிக்கப்பட்டுள்ளது.
- 1908-ஆம் ஆண்டு மார்ச் 13-ஆம் தேதி வ.உ.சி. கைதைத் தொடர்ந்து திருநெல்வேலியிலும் தூத்துக்குடியிலும் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
- அவர்கள் மீது நடத்தப்பட்ட அடக்குமுறையின் தொடர்ச்சியாக ஏற்பட்ட எழுச்சி குறித்தும் அதன் விளைவுகள் குறித்தும் இந்நூல் விரிவாக ஆராய்ந்துள்ளது.
- விருதாளர்களுக்கு ரூபாய் ஒரு லட்சம் ரொக்கம், செப்புப்பட்டயம், பொன்னாடை ஆகியவை தில்லி கோபர்நிகஸ் மார்கில் உள்ள கமானி அரங்கில் 2025, மார்ச் 8-ஆம் தேதி நடைபெறவுள்ள விழாவில் வழங்கப்படும்.
- வழக்கமாக 24 மொழிகளில் சாகித்திய அகாதெமி விருதுக்குரிய படைப்புகளின் பெயர்கள் மற்றும் எழுத்தாளர்களின் பெயர்கள் அறிவிக்கப்படும்.
- இம்முறை 21 மொழி படைப்புகளுக்கு விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.
- பெங்காலி, டோக்ரி உருது மொழிகளுக்கான படைப்புகளுக்குரிய விருதாளர்களின் பெயர் பிந்தைய தேதியில் அறிவிக்கப்படும் என்று சாகித்திய அகாதெமி தெரிவித்துள்ளது.
- வேலூர் மாவட்டம், குடியாத்தத்தில் 1967-இல் பிறந்த ஆ.இரா. வேங்கடாசலபதி. தமிழகத்தின் குறிப்பிடத்தக்க ஆய்வறிஞர்களுள் ஒருவர் ஆவார்.

## ஒரே நாடு ஒரே தேர்தல்: கூட்டுக்குழு அமைப்பு

- ஒரே நாடு ஒரே தேர்தல் மசோதாக்களை ஆய்வு செய்ய 31 எம்.பிக்கள் அடங்கிய நாடாளுமன்ற கூட்டுக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

**2 மசோதாக்கள்**

- மக்களவை மற்றும் மாநில சட்டப் பேரவைகளின் பதவிக் காலத்தை ஒரே நேரத்தில் நிறைவு செய்வது தொடர்பாக அரசமைப்பு சட்டப் பிரிவு 82ஏ-இல் புதிதாக துணைப்பிரிவு (2)-ஐ சேர்க்கவும்.
- மக்களவை, சட்டப்பேரவைகளை கலைப்பது தொடர்பாக சட்டப்பிரிவு 83(2), இல் புதிதாக துணைப் பிரிவுகள் (3), (4) -ஐ, சேர்க்கவும், ஒரே நேரத்தில் இரு தேர்தல்களையும் நடத்துவது தொடர்பாக சட்டப்பிரிவு 327-இல் திருத்தம் மேற்கொள்ளவும் இந்த முதல் மசோதா வழிவகை செய்கிறது.
- இரண்டாவது மசோதாவைப் பொருத்தவரை, ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதற்கு ஏதுவாக புதுச்சேரி, தில்லி, ஜம்மு-காஷ்மீர் ஆகிய யூனியன் பிரதேசங்களுடன் தொடர்புடைய சட்டங்களில் திருத்தம் மேற்கொள்வது தொடர்பானதாகும்.

**31 பேர் அடங்கிய குழு**

- ஒரே நாடு ஒரே தேர்தல் மசோதா கூட்டுக் குழுவில் 21 மக்களவை எம்.பிக்கள், 10 மாநிலங்களவை எம்.பி.க்கள் என தலைவர் உள்பட 31 எம்.பி.க்கள் இடம்பெறுகின்றனர்.

## ஏற்றம் கண்டதா இந்தியப் பொருளாதாரம்?

- இந்தியப் பொருளாதாரத்துக்கு இந்த ஆண்டு எளிதான ஆண்டாக அமையவில்லை என்பதை முதலில் சொல்லியாக வேண்டும்.

  2024 முதல் 2025 வரையிலான நிதியாண்டின் முதல் காலாண்டில் (அதாவது ஏப்ரல் முதல் ஜூன் 2024 வரையிலான காலாண்டில்) இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி ஆண்டுக்கு 6.7% வளர்ச்சி கண்டது.
- இது கடந்த ஐந்து காலாண்டுகளில் மிகக் குறைந்த வளர்ச்சி என்றாலும், உலகளாவிய நிச்சயமற்ற நிலைமைகள், பணவீக்கம் ஆகியவற்றின் பின்னணியில் இந்தியப் பொருளாதாரம் அடிப்படையில் வலுவாக இருக்கிறது என்றே கருதப்பட்டது.
- முதல் காலாண்டில் செலவு சார்ந்த, உற்பத்தி சார்ந்த காரணிகள் இரண்டும் சிறப்பாகச் செயல்பட்டன. நுகர்வுச் செலவு (7.4% அதிகரித்தது), மொத்த நிலையான மூலதன உருவாக்கம் (7.5%). ஏற்றுமதி (8.71%) ஆகியவை வலுவாக இருந்தன.
- உற்பத்தித் துறையில் எதிர்பார்த்ததைவிட வலுவான வளர்ச்சி இருந்தது. நிதியாண்டின் முதல் காலாண்டில் உற்பத்தித் துறை 7% வளர்ச்சியடைந்தது.
- கட்டுமானத் துறையும் 10.5% வளர்ச்சியுடன் வலுவாகச் செயல்பட்டது. ஆனால், இரண்டாவது காலாண்டின் முடிவில் செப்டம்பரில் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 5.4 சதவீதமாகச் சரிந்தது.

**பின்னணி என்ன?**

- வளர்ச்சி குறைவதற்குப் பல காரணிகள் உள்ளன. முதலாவதாக, பலவீனமான வெளிநாட்டுத் தேவை காரணமாகப் பொருள்களின் ஏற்றுமதி பாதிக்கப்பட்டது.

SURESH

- அதிக இறக்குமதியால், வர்த்தகப் பற்றாக்குறை அதிகரித்தது. அதிகரித்த புவிசார் நிச்சயமற்ற தன்மைகள், எரிசக்தி விலை வர்த்தகப் பற்றாக்குறையை மேலும் அதிகப்படுத்தியது.
- இந்திய பங்குகளில் இருந்து வெளிநாட்டு முதலீட்டாளர்கள் குறிப்பிடத்தக்க அளவு வெளியேறினர். அதே நேரத்தில், அந்நிய நேரடி முதலீட்டுவரத்து சீராக வளர்ந்தது ஒரு நேர்மறையான அம்சம்; இந்தியாவின் அந்நியச் செலாவணி கையிருப்பும் 2024இல் 64,8 பில்லியன் டாலர் அதிகரித்தது.
- இரண்டாவதாக, நுகர்வோர் செலவின சக்தியைக் (Consumer spending) குறைப்பதில் பணவீக்கம் குறிப்பிடத்தக்க காரணியாக இருந்தது.
- அக்டோபரில், சில்லறை உணவுப் (Retail food) பணவீக்கம் 10.87% ஆகவும், ஒட்டுமொத்தப் பணவீக்கம் 6.2% ஆகவும் இருந்தன. இது இந்திய ரிசர்வ் வங்கி நிர்ணயித்த இலக்கான 2-6 வரம்பைவிட அதிகம்.
- கோவிட்-19 தொற்றுநோய்க்குப் பிறகு முதல் முறையாக முந்தைய காலாண்டில் ஊதியங்கள் சுருங்கின. ஊதிய வளர்ச்சி, பணவீக்கத்தின் காரணமாக ஊதியத்தின் மதிப்பில் ஏற்பட்ட வீழ்ச்சி ஆகிய காரணிகள் நுகர்வோர் செலவின சக்தியைக் குறைத்ததால் நாட்டின் பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்பட்டது. குறைந்த நுகர்வோர் செலவின் சக்தியின் தாக்கம் கடந்த காலாண்டில் நிறுவன லாபங்களில் பிரதிபலித்தது.

**சுதாரித்துக்கொண்ட எம்.பி.சி.**

- பணவீக்க அபாயங்களை உணர்ந்து, ரிசர்வ் வங்கி தனது சொந்த வளர்ச்சிக் கணிப்புகளைக் கீழ்நோக்கித் திருத்தியுள்ளது. 2025 நிதியாண்டுக்கான இந்தியாவின் ஜிடிபி வளர்ச்சிக் கண்ணோட்டம் 7.2% இலிருந்து 6.6% ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.
- நிதிக் கொள்கைக் குழு (MPC) டிசம்பர் கூட்டத்தில் அதன் நிலைப்பாட்டை நடுநிலைக்கு மாற்றியது. இலக்குக்குள் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான அதன் பொறுப்பை இந்தக் கண்ணோட்டம் காட்டுகிறது.
- இதன் விளைவாக, டிசம்பர் நிதிக்கொள்கைக் குழுக் கூட்டத்தில், கொள்கை வட்டி விகிதத்தை (ரெபோ விகிதம்) ரிசர்வ் வங்கி குறைக்கும் என்கிற எதிர்பார்ப்பு பொய்த்தது.
- மாறாக முந்தைய காலாண்டில் இருந்த ரெபோ விகிதம் மாற்றப்படாமல், 6.5ஆக இருக்கும் என அறிவிக்கப்பட்டது. அடுத்த காலாண்டில் மொத்த நுகர்வோர் செலவினங்களில் இந்த நிலைப்பாட்டின் தாக்கத்தை நாம் உணர்வோம்.
- மூன்றாவதாக, தொழிலாளர் சந்தை சில அடிப்படை முரண்பாடுகளை வெளிப்படுத்தியது. தொழிலாளர் சந்தையில் சில சுவாரசியமான போக்குகளைக் காலமுறை அடிப்படையிலான தொழிலாளர் படை கணக்கெடுப்பு (PLFS) எடுத்துக்காட்டுகிறது.
- சமீபத்திய 2024 அறிக்கையின்படி, பெருந்தொற்றுக் காலத்தில் சரிந்த மொத்த வேலை வாய்ப்பில் சம்பளம் பெறும் தொழிலாளர்களின் பங்கு ஒரு சாதாரண வளர்ச்சியைப் பதிவுசெய்திருக்கிறது.
- எடுத்துக்காட்டாக, 2019 முதல் 2020 வரை, உற்பத்தி சேவைத் துறைகளில் சம்பளம் பெறும் வேலைகளின் பங்கு மொத்த வேலைகளில் கிட்டத்தட்ட 23% ஆக இருந்தது. கோவிட் பெருந்தொற்றுப் பரவலுக்குப் பிறகு, இந்தப் பங்கு 21% ஆகக் குறைந்தது.
- சமீபத்திய 2023-2024 காலமுறைத் தொழிலாளர் படை கணக்கெடுப்பின் தரவுகளின்படி மொத்த வேலைகளில் சம்பளம் பெறும் வேலைகளின் பங்கில் 21.7% என்கிற மிதமான அதிகரிப்பு பதிவானது.
- துறைகளுக்கிடையேயான சிதைவைப் பார்க்கும்போது, ஒருபுறம் உற்பத்தித் துறையில் வேலைவாய்ப்பின் பங்கு 2019-20இல் 11.2 ஆக இருந்து 2023-24இல் 11.47% ஆக அதிகரித்துள்ளது.
- இதேபோல், சேவைத் துறையில், பிற சேவைகள் (Business and Professional services) சார்ந்த துணைத் துறையில் மொத்த வேலைவாய்ப்பில் இதன் வேலைவாய்ப்புப் பங்கு 2019-20 மற்றும் 2023-24 ஆம் ஆண்டுகளில் அதன் நிலையான வளர்ச்சியைத் (11.9%) தொடர்கிறது.
- மறுபுறம், அதிக வேலை உருவாக்கும் துறைகள் கட்டுமானம் (2023-24இல் 12.2%), வர்த்தகம், ஹோட்டல்கள் உணவகங்கள் துறை (2023-24 இல் 12.2) ஆகும். ஆனால் இந்தத் துறைகள் முறைசாரா, நிச்சயமற்ற சுயதொழில் சார்ந்த வேலைகளின் அதிகச் செறிவைப் பதிவுசெய்துள்ளன.
- இத்தகைய வேலைகள் ஊதிய வேலைகளுடன் தொடர்புடைய நன்மைகளையும் எந்தச் சமூகப்பாதுகாப்பையும் வழங்காது.

**ஏற்றத்தாழ்வின் விளைவுகள்**

- மேற்கண்ட இரண்டு தரவுகளும், தொழிலாளர் சந்தையில் உள்ள அடிப்படைக் கட்டமைப்பில் உருவாகியுள்ள ஏற்றத்தாழ்வைக் காட்டுகின்றன. ஒருபுறம், உற்பத்தி சேவைகள் (குறிப்பாக பிறசேவைகள் துணைத்துறை) போன்ற துறைகள் வேலைகளில் தேக்கநிலை வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ளன.
- மறுபுறம் கட்டுமானம், ஹோட்டல்கள் உணவகங்கள், விவசாயம் போன்ற வேலைவாய்ப்பை உருவாக்கும் துறை கள் முறைசாரா, சாதாரண, தரம் குறைந்த வேலைகளையே உருவாக்குகின்றன.
- தொழிலாளர் சந்தையில் ஏற்பட்டுள்ள இந்த அடிப்படை முரண்பாடுகள் நீண்ட கால வளர்ச்சிப் பாதையில் உள்ள சிக்கல்களை எடுத்துக்காட்டுகின்றன.
- தற்போதைய வளர்ச்சிப் பாதையானது, பொருளாதார வளர்ச்சி வேலை வாய்ப்பு உருவாக்கம்-வேலைகளின் தரம் ஆகியவற்றுக்கு இடையே உள்ள அடிப்படை முரண்பாட்டைத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளது.
- இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தொழிலாளர்களுடைய ஊதியப் பங்கில் ஏற்பட்டுள்ள நீண்டகாலச் சரிவு இத்தகைய முரண்பாட்டைப் பிரதிபலிக்கிறது.
- 2024ஆம் ஆண்டு வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள இந்தத் தடுமாற்றம், இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியில் உள்ள அடிப்படை முரண்பாடுகள் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தின் எச்சரிக்கை சமிக்ஞையாகப் பார்க்கப்பட வேண்டும்.
- பொருளாதார வளர்ச்சியின் அளவின் மீது மட்டுமே கவனம் செலுத்துவதற்குப் பதிலாக, ஏற்றத்தாழ்வுகளால் வளர்சியில் ஏற்படும் அபாயங்களைக் குறைப்பதில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும்.
- அனைத்து அரசியல் சித்தாந்தங்களிலும், பொருளாதார, சமூகச் சமத்துவமின்மையால் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்படும் அபாயங்கள் குறித்த ஒருமித்த கருத்து உள்ளது.
- சமத்துவமற்ற வளர்ச்சி என்பது பொருளாதாரம், அரசியல் ஆகிய இரண்டு துறைகளுக்கும் நிச்சயமாக எதிர்மறை ஆபத்தையே ஏற்படுத்தும்.
- எனவே, இந்தியாவின் வளர்ச்சி உத்தியானது வளர்ச்சி-வேலை வாய்ப்பு முரண்பாட்டை மீண்டும் உருவாக்குவதைத் தவிர்க்கும் வகையில் வகுக்கப்பட வேண்டும்!